S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service), Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE சனி பிப்ரவரி 07 * 2026 * மலர் -1 * இதழ்-249* VOL-1 * ISSUE-249 விலை ரூ.3 * பக்கம் -4

# எழும்பூர் அருங்காட்சியாக வளாகத்தில் மாமேதை கார்ல் மார்க்ஸ் சிலை!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!!

சென்னை, பிப். 7

தமிழ்நாடு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில், மாமேதை கார்ல் மார்க்ஸ் திருவுருவச் சிலை சென்னை. எழும்பூர் அருங்காட்சியக வளாகம், கன்னிமாரா பொது நூலகத்தின் வாயிலில் 85 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

சென்னை, எழும்பூர் அருங்காட்சியக வளாகம், கன்னிமாரா பொது நூலகத்தின் வாயிலில் 85 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள மாமேதை கார்ல் மார்க்ஸ் திருவுருவச் சிலையை தமிழ்நாடு முதலமைச்சர் இன்றையதினம் திறந்து வைத்து, அச்சிலை அருகில் வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். முன்னதாக, மாமேதை கார்ல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கும் வகையில் அங்கு அமைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியையும் பார்வையிட்டார்.

எழுத்தாளரும், மார்க்சிய சிந்தனையாளருமான பேராசிரியர் அ. மார்க்ஸ் மாமேதை கார்ல் மார்க்சுக்கு சென்னையில் சிலை அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து எழுதிய கடிதத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன் தமிழ்நாடு முதலமைச்சர் வழங்கியதன் அடிப்படையில் அவரது திருவுருவச்சிலை சென்னை. எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் நிறுவப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, கே. சுப்பராயன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன், தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு.செல்வப்பெருந்தகை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு. வீரபாண்டியன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், முன்னாள் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ. பரந்தாமன், நாகை மாலி, பிரபாகரராஜா, மு. பாபு, முகமது ஷா நவாஸ், துணை மேயர் மு. மகேஷ் குமார், இந்து குழும இயக்குநர் என். ராம், கம்யூனிஸ்ட் கட்சிகளின் நிர்வாகிகள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் ரா.வைத்திநாதன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில், மாமேதை கார்ல் மார்க்ஸ் திருவுருவச் சிலை சென்னை, எழும்பூர் அருங்காட்சியக வளாகம், கன்னிமாரா பொது நூலகத்தின் வாயிலில் 85 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, கே. சுப்பராயன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் வைகோ. விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன், தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு.செல்வப்பெருந்தகை. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு. வீரபாண்டியன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம், முன்னாள் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ. பரந்தாமன், நாகை மாலி, பிரபாகரராஜா, மு. பாபு, முகமது ஷா நவாஸ், துணை மேயர் மு. மகேஷ் குமார், இந்து குழும இயக்குநர் என். ராம், கம்யூனிஸ்ட் கட்சிகளின் நிர்வாகிகள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணிச் செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் தஞ்சாவூர் மாவட்டம் சானுரப்பட்டியில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். உடன் கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பள்ளிக்கல்வித்துறைஅமைச்சர்முனைவர்அன்பில்மகேஸ்பொய்யாமொழி,தஞ்சைமத்தியமாவட்டக்கழகச்செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான துரை சந்திரசேகர், முன்னாள் அமைச்சர்கள் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம், ஆர். வைத்திலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம், இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர் தாட்கோ தலைவர் இளையராஜா, மாநகரக் கழகச் செயலாளரும், மாநகராட்சி மேயருமான சண் ராமநாதன், ஒன்றியச் செயலாளர் சு.முருகானந்தம், கழக நிர்வாகிகள், இளைஞரணியினர், மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் சோனோரிபட்டியில் கூட்டுக்குடிநீர் திட்டத்தை எம்.பி.க்கள் ராஜேஸ்குமார், மாதேஸ்வரன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். அருகில் கலெக்டர் துர்காதேவி, ராமலிங்கம் எம்.எல்.ஏ. மற்றும் பலர் உள்ளனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், சிங்காரப்பேட்டை ஊராட்சி, புளியானூர் பொதுப்பணித்துறை ஏரிக்கு, ரூ.98.10 லட்சம் மதிப்பில் தடுப்பணை கட்டுதல் மற்றும் கால்வாய் அமைக்கும் பணிகளை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன், திருப்பத்தூர் கவிதா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# மணிப்பூரில் மீண்டும் கலவரம்:

# பெண் துணை முதல்வர் தலைக்கு ரூ.20 லட்சம் பரிசு!

## பழங்குடியினர் அறிவிப்பால் பரபரப்பு!!

இம்பால், பிப்.7–

மணிப்பூரில் மீண்டும் கலவரம் வெடித்தது. பெண் துணை முதல்வர் நெம்சா கிப்சன் தலைக்கு ரூ.20 லட்சம் பரிசு வழங்கப்படும் என பழங்குடியினர் அமைப்பு அறிவித்துள்ளதால் பரபரப்பு உச்சம் தொட்டுள்ளது.

மணிப்பூர் மாநிலத்தில் 36 சமூகங்களைச் சேர்ந்தவர்கள் உள்ளனர். மெய்தி இன மக்களே பெரும்பான்மையினர் ஆவர். குக்கிகள், மிசோக்கள், நாகாக்கள் சிறுபான்மையினராக உள்ளனர்.

மெய்திகளுக்கும், குக்கிகளுக்கும் இடையில் வெடித்த மோதல் சுமார் 2 ஆண்டுகள் நீடித்தது. முதல்வர் பிரேம் சிங் கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 9–ஆம் தேதி பதவியை ராஜினாமா செய்தார். இதையடுத்து பிப்ரவரி 12–ஆம் தேதி ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டது.

இவ்வருட தொடக்கத்தில் மீண்டும் பா.ஜ.க. ஆட்சியை ஏற்படுத்த முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. இதன்படி இம்மாதம் 4–ஆம் தேதி, யும் நாம் கெம்சந்த் சிங் தலைமையில் பா.ஜ.க. அரசு பதவியேற்றது. இவர் மெய்தி சமூகத்தைச் சேர்ந்தவர்.

குக்கி சமூகத்தைச் சேர்ந்த நெம்சா கிப்சன், நாகா சமூகத்தைச் சேர்ந்த எல் டியோ ஆகியோர் பதவியேற்றனர். மேலும் 2 அமைச்சர்கள் பதவி ஏற்றுக் கொண்டனர்.

குக்கிகள், மெய்திகளுடன் சமரசமாகச் செல்ல முடியாது என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளனர். தாங்கள் வாழும் பகுதிகள் சட்டசபையுடன் கூடிய யூனியன் பிரதேசமாக்க வேண்டும் என்று குக்கிகள் வற்புறுத்தி வருகின்றனர்.

நெம்சா கிப்சன் துணை முதல்வராக பதவியேற்றதையும் குக்கி சமூகத்தைச் சேர்ந்த எம்.எல்.ஏ.க்கள் அரசுக்கு ஆதரவு தெரிவித்துள்ளதையும் குக்கி பழங்குடியினர் அமைப்புகள் ஏற்கவில்லை.



அமைச்சரவையிலும் பங்கேற்றக் கூடாது. அரசையும் ஆதரிக்கக் கூடாது என்ற நிலைப்பாட்டில் குக்கி பழங்குடியின அமைப்புகள் உறுதியாக உள்ளன.

இதற்கிடையே குக்கி சமூகத்தினர் பெரும்பான்மையாக வாழும் சுராச் சந்த்பூர் மாவட்டத்தில் வன்முறை வெடித்தது. பலர் படுகாயம் அடைந்தனர். தீவைப்பு சம்பவங்களும் நிகழ்ந்தன. முழு அடைப்பு நடத்த பழங்குடியின அமைப்புகள் அழைப்பு விடுத்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பரபரப்பான சூழ்நிலையில் பெண் துணை முதல்வர் நெம்சா கிப்சன் தலைக்கு ரூ.20 லட்சம் பரிசு வழங்கப்படும் என பழங்குடியினர் அமைப்பு அறிவித்துள்ளதால் பரபரப்பு உச்சம் தொட்டுள்ளது.

இதைப்போல அரசுக்கு ஆதரவு தெரிவித்துள்ள குக்கி எம்.எல்.ஏ.க்களை கொன்றால் தலா ரூ.10 லட்சம் பரிசு என்றும் பழங்குடியினர் அமைப்பு அறிவித்துள்ளது.

மணிப்பூரில் புதிய அரசு பதவியேற்ற பிறகும் இயல்பு நிலை திரும்பாததால் ஆளுநர் அஜய்குமார் பல்லாவும், முதல்வர் யும்நாம் கெம்சந்த் சிங்கும் அவசர ஆலோசனை நடத்தினர். அமைதியை நிலைநாட்ட அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என முதல்வர் யும்நாம் கெம்சந்த் சிங் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் மல்லன் குழி கிராமத்தில், மாதேவப்பா என்பவரின் விவசாய தோட்டத்தில் இரண்டு காட்டு யானைகள் புகுந்து அட்டகாசம் செய்தன. இதில் சேதமடைந்த வாழைகளை படத்தில் காணலாம்.



## திருப்பத்தூரில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில்

# 8 துறையின் கீழ் 1200 பயனாளிகளுக்கு ரூ.3 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்!

வாணியம்பாடி, பிப்.7

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் அடுத்த சி.கே. சி ரோடு பகுதியில் உள்ள தனியார் மண்டபத்தில் ஏற்கனவே உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் மூலம் நடைபெற்ற 209 முகாம்களில் தகுதி பெற்ற பயனாளிகளுக்கும் சமூக பாதுகாப்பு திட்டத்தின் மூலம் புதிய பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் சிவ சவுந்தரவல்லி தலைமை வகித்தார்.

விழுப்புரம் மாவட்டத்தில் தமிழக முதலமைச்சர்மு.க.ஸ்டாலின்நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேரடி காணொளிகாட்சிவாயிலாகநடைபெற்று முடிந்ததை தொடர்ந்து திருப்பத்தூரில் நடைபெற்ற இந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 8 துறையின் கீழ் 1200 பயனாளிகளுக்கு 2 கோடியே 91, லட்சத்துக்கு 96 ஆயிரத்து 250 ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கினர்.

நிகழ்ச்சியில் திமுக மாவட்ட செயலாளரும் ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க. தேவராஜி, திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி, ஆம்பூர் சட்டமன்றஉறுப்பினர்ஏ.சி.வில்வநாதன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் என். கே. ஆர். சூரியகுமார், திருப்பத்தூர், ஜோலார்பேட்டை, ஆலங்காயம், ஒன்றிய குழு தலைவர்கள், அரசு துறை அதிகாரிகள், கட்சி நிர்வாகிகள்,தொண்டர்கள்,பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



# பெருந்துறையில் மாவட்ட செயலாளர் விஜயபாலன் தலைமையில் புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம்!

பெருந்துறை, பிப்.7

ஈரோடு மாவட்டம் பெருந்துறை விடு தலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் விஜயபாலன் தலைமையில் புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம் சக்தி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக மாநில துணை பொதுச்செயலாளர் கனி யமுதன், மாநில செயலாளர் (வழக்கறி ஞர் பிரிவு )காஞ்சி பார்வேந்தன் ஆகி யோர் கலந்து கொண்டு சிறப்பு உரையாற்றினர். தொடர்ந்து இளஞ்சி றுத்தை எழுச்சி பாசறையின் ஒன்றிய செயலாளர் அண்ணாமலை வரவேற்பு ரையாற்றினார், தொழிலாளர் விடுதலை முன்னணியின் மாவட்ட அமைப்பாளர் ஆட்டோ பாபு முன்னிலை வகித்தார், ஈரோடு கிழக்கு தொகுதி மாவட்ட செய லாளர் சாதிக், மொடக்குறிச்சி தொகுதி மாவட்ட செயலாளர் கமலநாதன், மண் டல துணைச் செயலாளர் மிசா தங்க வேல், திருப்பூர் பாராளுமன்ற தொகுதி செயலாளர் தம்பி முருகானந்தம், திருப் பூர் தொகுதி மாவட்ட செயலாளர் ஏ. பி. ஆர் மூர்த்தி, அவிநாசி தொகுதி மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் சத்தியமூர்த்தி ஆகியோர்கருத்துரையாற்றினர். மேலும் இவ்விழாவில் ஒலகடம் வெங்கடேஷ், ஊத்துக்குளி ஒன்றிய பொறுப்பாளர்கள் தேவராஜ் ,மருதாச்சலம் கிருஷ்ண மூர்த்தி, சுப்பிரமணியம், பெருந்துறை ஒன்றிய பொறுப்பாளர்கள் ரமேஷ் வீரன், சென்னிமலை ஒன்றிய பொறுப்பாளர் கள் நவீன், மகளிர் பொறுப்பாளர்கள் ஈஸ் வரி, கவிதா அதிதியூர் தீபா உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும், உறுப்பினர்க ளும், மகளிர் அணியினரும் கலந்து கொண்டனர் இறுதியாக நகர துணைச் செயலாளர் ஜெகதீசன் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி உரையாற்றினார்.

## ஜாக்டோ ஜியோ சார்பில்

# முதல்வருக்கு நடைபெறும் நன்றி அறிவிப்பு மாநாட்டில் குடும்பத்தோடு கலந்து கொள்வதென தீர்மானம்!




புதுக்கோட்டை பிப்.7

புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு ஆசிரியர் முன் னேற்ற சங்கத்தின் செயற்குழு பொதுக்குழு கூட் டம் அரசு அலுவலர் கட்டிடத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் மாவட்டத் தலைவர் ராஜாங்கம் தலைமை வகித்தார். மாவட்ட அமைப்பு செயலாளர் முத் துக்குமார் அனைவரையும் வரவேற் றார்.

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங் கத்தின் மாநில சட்ட ஆலோசகர் ராஜா, மாநி ல செய்தி தொடர்பாளர் ரகம துல்லா ஆகியோர் முன்னிலை வகித்த னர்.

இச்செயற்குழு, பொதுக்குழு கூட் டத்தில் அனைத்து அரசு ஊழியர்கள் ஆசிரியர் பெருமக்கள் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட தமிழ்நாடு உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை செயல்படுத்திய முதல்வருக்கு நன்றி தெரி வித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பிப்ரவரி 8 ஜாக்டோ ஜியோ சார்பில் நடைபெறும் நன்றி அறிவிப்பு மாநாட் டில் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் அனைத்து மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் குடும்பத்தோடு கலந்து கொள்வதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2004 முதல் 2006 தொகுப்பூதிய காலத்தை பணிக் கல மாக அறிவிக்க வேண்டும் எனதீர்மானம் நிறைவேற்ற ப்பட்டது. உயர்கல்விக்கு ஊக்க ஊதி யத்தை பழைய மு றைப்படி வழங்க வேண்டும் எனதீர்மானம் நிறைவேற்ற ப்பட்டது.

இந்நிகழ்வில் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத் தைச் சேர்ந்த மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் பழ னிச்சாமி, ரவீந்திரன், வீரமணி, முருகராஜ், வெள்ளை ச் சாமி, உள் ளிட்ட பல்வேறு நிர்வாகிகள் கலந்து கொண் டனர். நிறைவாக கல்வி மாவட்ட செயலாளர் முனைவர் கலை யரசன் நன்றி கூறினார்.

## கச்சத்தீவை மீட்டு

# அன்னை பாரதத்துடன் இணைக்க இந்து பாதுகாப்பு படையின் தேசிய தலைவர் கண்ணன் பிரதமருக்கு வேண்டுகோள்!



பவானி,பிப்.7

ஈரோடு மாவட்டம் பவானி தபால் நிலையத்தில் இந்து பாதுகாப்பு படை யின் தேசிய தலைவர் கண்ணன் தலைமை யில் பிரதமர் நரேந்திர மோடிக்கு கச்சத்தீ வையும் மீனவர் வாழ்க்கையும் மீட்டெடுக்கக்கோரி தபால் அனுப்பும் நிகழ்ச்சி நடைபெற்றது.இந் நிகழ்வில் செய்தியாளர்களிடம் பேசிய தேசிய தலைவர் கண்ணன் இழந்த மண்ணை மீட்டபோம்.இழந்து போன மீனவர் வாழ் வைச் செழிக்கச் செய்வோம்.

பாரத தேசத்தின் பெருமையையும், இந்து தர்மத்தின் மாண்பையும் உலகறி யச் செய்து வரும் பாரதப் பிரதமர் நரேந் திர மோடியின் கவனத்திற்கு, இந்து பாது காப்பு படையின் சார்பில் விடுக்கப்படும் கோரிக்கை என்னவென்றால்

நமது அன்னை பாரதத்தின் பிரிக்க முடி யாத அங்கமாக விளங்கிய கச்சத்தீவு, கடந்த கால ஆட்சியாளர்களின் பலவீனத் தாலும், அரசியல் சூழ்ச்சிகளாலும் நம்மி டமிருந்து அநியாயமாகப் பறிக்கப்பட் டது. அன்று இழைக்கப்பட்ட அந்த வரலாற்றுத் துரோகத்தின் விளைவை, இன்று நம் தமிழக மீனவர்கள் தங்கள் ரத் தத்தாலும், கண்ணீராலும் அனுபவித்து வருகிறார்கள்.

இதனை முன்னிட்டு பிரதமர் பொறுப் பேற்றபிறகு, பலதீர்க்கப்படாமல் இருந்த பல தேசியப் பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டு, இழந்த பெருமைகளை மீட்டு வருகிறார். அதே உத்வேகத்துடன், நம் மீனவர்களின் வாழ்வாதார உரிமையை யும், பாரதத்தின் கடல் எல்லைப் பாது காப்பையும் உறுதி செய்ய, கச்சத்தீவை மீண்டும் தாயகத்துடன் இணைக்க வேண் டும் எனப் பாரதப் பிரதமரை அன்போடு வேண்டிக் கொள்கிறேன்.

கச்சத்தீவு என்பது வெறும் மணற்பரப்பு அல்ல; அது நம் மீனவர்களின் ரத்தமும் சதையுமான உரிமை. அந்த மண்ணை நீங் கள் மீட்டுத் தரும்போது, தமிழகத்தின் கடலோரப் பகுதி முழுவதும் புதிய ஒளி பிறக்கும். மீனவர்களின் வாழ்வில் ஒளி ஏற்றி, பாரதத்தின் ஒருமைப்பாட்டை நிலைநாட்டும் இந்த உன்னதப் பணியில், பாரதப் பிரதமருக்கு தங்களுக்குப் பின் னால் இந்து பாதுகாப்பு படையும், ஒட்டு மொத்த இந்து மக்களும் என்றும் நன்றிக் கடனோடு துணை நிற்போம்.

பாரதத்தை மீட்போம் கச்சத்தீவை காப்போம் எனக் கூறினார். இந்நிகழ்வில் ஒருங்கிணைப்பாளர் மீசைராஜ், மாநில தலைவர் ஊடகப்பிரிவு கோபாலகிருஷ் ணன், மாநில இணைச் செயலாளர் ஊட கப்பிரிவு உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.




# திருப்பத்தூர் மாவட்டத்தில் தமிழக அரசை கண்டித்து நூதன முறையில் போராட்டம்!

## அரசு உதவி பெறும் கல்லூரி பேராசிரியர்கள் வலுவான எதிர்ப்பு!!

திருப்பத்தூர் பிப்.7

திருப்பத்தூர் மாவட்டம்.தமிழக அர சின் அலட்சியப் போக்கைக் கண்டித்தும், அரசு உதவி பெறும் கல்லூரி பேராசிரியர் களுக்குரிய சட்டபூர்வமான பணப்பலன் கள், பணி மேம்பாடு மற்றும் கல்வி ஊக் கத்தொகைகள் வழங்கப்படாததை எதிர்த்தும், தமிழகம் தழுவிய அளவில் இன்று காலை அனைத்து மாவட்டங்களி லும் ஒருங்கிணைந்த வகையில் வாயில் முழக்கப் போராட்டம் நடைபெற்றது

இந்தப் போராட்டத்தில், அரசு உதவி பெறும்கல்லூரிகளில் பணியாற்றும் பேரா சிரியர்கள் பெருமளவில் பங்கேற்று, தங்க ளின் நீண்டகால கோரிக்கைகளுக்கு உட னடி தீர்வு வழங்க வேண்டும் என அரசை வலியுறுத்தினர். குறிப்பாக, எம்.பில், பி. எச்.டி போன்ற உயர் கல்வி தகுதிகளுக் கான ஊக்கத்தொகை, பணி மேம்பாட்டு பலன்கள், நிலுவையில் உள்ள ஊதியச் சீர மைப்பு தொடர்பான கோரிக்கைகள் ஆகி யவை பல ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் இருப்பதாக பேரா சிரியர்கள் குற்றம்சாட்டினர்.

திருப்பத்தூர் மாவட்டத்தில், தூய நெஞ் சக் கல்லூரி கிளை முன்பாக பல்கலைக்க ழக ஆசிரியர் சங்கத்தின் சார்பில் இன்று காலை நடைபெற்ற போராட்டத்தில், 50க்கும் மேற்பட்ட அரசு உதவி பெறும் கல்லூரி பேராசிரியர்கள் பங்கேற்றனர். இப்போராட்டத்தின் போது, அரசின் கவ னத்தை ஈர்க்கும் வகையில் கருப்புத் துணி யால் கண்களைக் கட்டிக்கொண்டு, கையில் திருவோடு ஏந்தியும், தங்களின் நிலை மையை வெளிப்படுத்தினர். கல்வியாளர் களின் உரிமைகளைப் புறக்கணிக்கும் அரசு கண்மூடி இருப்பதைச் சுட்டிக்காட்டும் வகையிலேயே இந்த போராட்டம்" என பேராசிரியர்கள் தெரிவித்தனர். மேலும், உயர் கல்வியை மேம்படுத்த வேண்டிய நிலையில், அதற்குத் துணைபுரியும் பேரா சிரியர்களே புறக்கணிக்கப்படுவது வேதனை அளிக்கிறது" எனவும் அவர்கள் வேதனையுடன் கூறினர்.

## போச்சம்பள்ளி அருகே சாலை விபத்து:

# வாலிபர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு; சாலை விரிவாக்கக் கோரிக்கை!

கிருஷ்ணகிரி, பிப்.7

கிருஷ்ணகிரி மாவட்டம் சந்தூர் கிராமத் தைச் சேர்ந்தவர் ராஜா. இவரது மகன் மணிமாறன் (வயது 28). இவர் சந்தூரில் உள்ள ஒரு வெல்டிங் பட்டறையில் தொழிலாளியாக பணி யாற்றி வந்தார். நேற்று இரவு மணிமாறன் தனது பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத் தில் போச்சம்பள்ளியிலி ருந்து சந்தூர் நோக்கிச் சென்று கொண்டிருந்தார். வாகனம் வெப்பாலம்பட்டி ஆஞ்சநே யர் கோவில் அருகே சென்ற போது, எதிர்பாராத விதமாக நிலைதடுமாறி சாலையோ ரம் கவிழ்ந்தது. இந்த விபத் தில் மணிமாறனின் தலை யில் பலத்த காயம் ஏற்பட்டு, ரத்தம் வெளியேறியது. விபத்தைக் கண்ட அக்கம் பக்கத்தினர், மணிமாறனை மீட்டு முதலுதவிக்காக போச்சம்பள்ளியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். பின்னர், மேல் சிகிச் சைக்காக சேலம் அரசு மருத்துவக் கல் லூரி மருத்துவமனையில் அவர் அனும திக்கப்பட்டார். அங்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி, இன்று காலை மணிமாறன் உயிரிழந்தார். இச்சம்பவம் குறித்து போச்சம்பள்ளி காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த



விபத்து குறித்து சமூக ஆர்வ லர் மணி அவர்கள் கடும் அதி ருப்தி தெரிவித்துள்ளார். அவர் கூறுகையில், "இந்தப் பகுதியில் சாலை மிகவும் குறுகலாக இருப்பதால் வாகன ஓட்டிகள் தொடர்ந்து விபத்துக்குள்ளாகி வருகின் றனர். சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ளா மல் அதிகாரிகள் மெத்தன மாக இருப்பது வேதனை யளிக்கிறது. மக்களின் உயிரைப் பாதுகாக்க அரசு உடனடியாக போச்சம்பள்ளி சந்தூர் சாலையை விரிவுபடுத்தி தரமான சாலை அமைக்க வேண்டும்" என கோரிக்கை விடுத்துள்ளார். இந்த விபத்து அப்பகுதி யில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், இனியாவது அதிகாரிகள் நட வடிக்கை எடுப்பார்களா என்ற எதிர் பார்ப்பு எழுந்துள்ளது.

...விரைவில்...
உங்கள் உள்ளாட்சி அரசு நாளிதழ்...
அறிவே ஆன்மீகம் ஜோதிட செய்திகள்.....
வாழ்விலும், தொழிலிலும் உள்ள அனைத்து பிரச்சினைகளில் இருந்து விடுபட்டு வாழ்வில் நிரந்தர தீர்வு காண, "வாழ்வில் வெற்றி பெற்று", "வாழ்வில் மகிழ்ச்சியுடன் வாழ" வழிகாட்டுகின்றார்.
40 ஆண்டுகள் ஆன்மீகம் மற்றும் ஜோதிட பணிகளை செய்து வரும்....
சிவத்திரு. சிவமணி சுவாமிகள்
96593 20245 - 98426 79941
உள்ளாட்சி அரசு நாளிதழ்

# Media Expo விரிவுபடுத்த Messe Frankfurt Trade Fairs India, Business Live Trade Fairs நிறுவனத்துடன் கைகோர்க்கிறது!



கோயம்புத்தூர்,பிப்.7

Messe Frankfurt Trade Fairs India மற்றும் Business Live Trade Fairs இணைந்துள்ள இந்த முக்கிய கூட்டாண்மையின் கீழ், Sign India Expo இப்போது Media Expo ஆக மாற்றப்ப டுகிறது. இதன் ஒரு பகுதியாக Media Expo Kochi மற்றும் Media Expo Hyderabad அறிமுகப்படுத்தப்படுகின்றன; மேலும் Sign India Expo Chennai, ஏற்கனவே நடைபெற்று வரும் Media Expo Chennai நிகழ்ச்சியுடன் இணைக்கப்ப டுகிறது. இதன் மூலம் முன்பு மூன்று நகரங்களில் நடை பெற்ற Media Expo, இனி சென்னை, ஹைதராபாத், கொச்சி, மும்பை மற்றும் நியூ டெல்லி ஆகிய ஐந்து முக் கிய நகரங்களுக்கு விரிவடைகிறது.

மும்பை, நியூ டெல்லி மற்றும் சென்னை ஆகிய நக ரங்களில் 56 வெற்றிகரமான பதிப்புகளை நடத்திய Media Expo, தென் இந்திய சந்தைகளில் வலுவான தடத்தை பதித்துள்ள Sign India Expoவின் மரபையும் இணைத்து, பிரிண்டிங், சைனேஜ், டிஜிட்டல் சைனேஜ், OOH–DOOH, ரீட்டெயில் டிஸ்ப்ளே, POP–POSM, LED திரைகள், பெரிய அளவிலான பிரிண்டிங், 3D மற்றும் லேசர் பிரிண்டிங் உள்ளிட்ட பல தயாரிப்பு பிரிவுகளுக்கான ஒருங்கி ணைந்த தொழில் வர்த்தக கண்காட்சி தளமாக மாறுகி றது. இந்த மாற்றம், தென் இந்தியாவின் முக்கிய வணிக மையங்களில் வாங்குபவர்–விற்பனையாளர் தொடர்பு களை மேலும் வலுப்படுத்தும். இந்த கூட்டாண்மையை பற்றி Messe Frankfurt Asia Holdings Ltd நிறுவனத்தின் நிர் வாக இயக்குநர் திரு. ராஜ் மணேக் மற்றும் Business Live Trade Fairs இயக்குநர் திரு. சிவ பிரசாத் பல்நாட்டி ஆகி யோர், தென் இந்தியாவில் தொழில்துறைக்கு ஒருங்கி ணைந்த, உலகளாவிய நிபுணத்துவம் கொண்ட கண் காட்சி மேடை உருவாகும் என வலியுறுத்தினர். IMARC Group மற்றும் Mordor Intelligence மதிப்பீடுகளின்படி, இந் தியாவின் பிரிண்டிங், சைனேஜ் மற்றும் OOH–DOOH சந் தைகள் வேகமாக வளர்ந்து வரும் நிலையில், இந்த முயற்சி தொழில்துறையின் எதிர்கால தேவைகளுக்கு தகுந்த வலுவான சூழலமைப்பை உருவாக்குகிறது.

# Naruto உடன் கைகோர்த்த பிரிட்டானியா ட்ரீட் கிரீம் வேஃபர்: ஸ்பெஷல் எடிஷன் பேக்குகள் மற்றும் AR பிரச்சாரம் அறிமுகம்!

வேலூர், பிப்.7




பிரிட்டானியா ட்ரீட் கிரீம் வேஃபர் நிறுவனம், Sony YAY!யின் உலகளாவிய அனிமே ஐகானான Naruto உடன் இணைந்து, Naruto திமையான சிறப்பு எடிஷன் பேக்குகளை அறிமுகப்படுத் தியுள்ளது. இந்தியாவில் அனிமே ரசிகர்களை நேரடி யாக இணைக்கும் முயற் சியை உருவாக்கப்பட்ட இந்த கூட்டாண்மை, FMCG துறையின் முன்னோடியான முயற்சியாக பார்க்கப்படுகி றது. Schbang வடிவமைத்த #TreatItJutsuItWinIt பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, பேக்கில் உள்ள QR குறி யீட்டை ஸ்கேன் செய்து AR அடிப்படையிலான Jutsu கை முத்திரை சவாலில் பங்கேற்கும் வாய்ப்பு வழங்கப்பட் டுள்ளது. இந்த டிஜிட்டல் அனுபவம் மூலம் ரசிகர்கள் Naruto உலகத்தை கேம் ஃபைட் முறையில் அனுபவிக்க முடியும்; வெற்றி பெற்றவர்கள் பிரத்யேக Naruto பரிசு களை வெல்லும் வாய்ப்பைப் பெறுகின்றனர். "இந்திய இளைஞர்களிடம் அனிமே ஒரு வலுவான கலாச்சார தாக்கத்தை உருவாக்கியுள்ளது. Naruto உடனான இந்த கூட்டணி, நுகர்வோரின் அர்த்தமுள்ள மற்றும் கலாச்சார ரீதியான இணைப்பை உருவாக்கும் ஒரு முயற்சியாகும்," என்று பிரிட்டானியாவின் மார்க்கெட்டிங் பொது மேலா ளர் சித்தார்த் குப்தா தெரிவித்துள்ளார்.

# ஹெச்பி இண்டிகோ மற்றும் ஹெச்பி இண்டஸ்ட்ரியல் 3D பிரிண்டிங் தீர்வுகளுக்கான சிறப்பு மையத்தை ரெடிங்டன் சென்னையில் தொடங்கியது!

சென்னை, பிப்.7



ரெடிங்டன் லிமிடெட், ஹெச்பி இண்டிகோ மற் றும் ஹெச்பி இண்டஸ்ட்ரி யல் 3D பிரிண்டிங் சொல்யூ ஷன் களுக்கு சிறப்புமிக்க மையத்தை (Centre of Excellence) சென்னையில் தொடங்கியுள் ளது. 20,000 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள இந்த மையம், டிஜிட்டல் பிரிண்டிங் மற்றும் தொழில்துறை 3D உற்பத்தி தொழில்நுட்பங்கள் நேரடியாக அனுபவிக்கும், பரிசோதிக்க மற்றும் மதிப்பீடு செய்யும் டெமோ மற்றும் அனுபவ தளமாக உருவாக்கப்பட்டுள்ளது.

உற்பத்தியாளர்கள், பிராண்டுகள், அச்சு சேவை வழங்கு நர்கள், தொடக்க நிறுவனங்கள் மற்றும் தொழில்நுறை பங் குதாரர்கள் இணையும் திறந்த, கூட்டு தளமாக இது செயல் படும்.

இந்த மையத்தில் ஹெச்பி இண்டிகோ 18K, 7K டிஜிட்டல் பிரஸ்கள் மற்றும் ஹெச்பி ஜெட் ஃப்யூஷன் 5600 3D பிரிண் டர் உள்ளிட்ட அடுத்த தலைமுறை தொழில்நுட்பங்கள் நிறுவப்பட்டுள்ளன. தயாரிப்பு தகுதி சோதனை, பயன் பாடு சோதனை, பணிப்பாய்வு மேம்பாடு மற்றும் உற்பத்தி அளவீடு போன்ற வசதிகள் மூலம் வாடிக்கையாளர்கள் தங் கள் டிஜிட்டல் உற்பத்தி தேவைகளுக்கான சரியான தீர்வு களை தேர்வு செய்ய முடியும். "டிஜிட்டல் மற்றும் 3D பிரிண் டிங் தொழில் நுட்பங்களின் நிஜ உலக தாக்கத்தை வாடிக்கையாளர்கள் தெளிவாகக் காணக்கூடிய அனுபவ தளமாக இந்த CoE வடிவமைக்கப்பட்டுள்ளது," என்று ரெடிங்டன் லிமிடெட் டிஜிட்டல் பிரிண்டிங் துணைத் தலைவர் ரமேஷ் கே.எஸ். தெரிவித்தார்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002. Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore 641 001. Editor: N.JAYAPRAKASH






தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கள் துறையின் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் ரூ.2378,30 கோடி செலவில் 9 முடிவுற்ற பணிகளையும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் ரூ. 635.30 கோடி செலவில் 22 முடிவுற்ற பணிகளையும், நகராட்சி நிருவாக இயக்குநரகத்தின் சார்பில் ரூ. 237.04 கோடி செலவில் 62 முடிவுற்ற பணிகளையும், பேரூராட்சிகள் இயக்குநரகத்தின் சார்பில் ரூ. 74.45 கோடி செலவில் 27 முடிவுற்ற பணிகளையும், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ. 86.04 கோடி செலவில் முடிவுற்ற 63 பணிகளையும், திறந்து வைத்தார். மேலும், பெருநகர சென்னை பாநகராட்சி சாய்பில் ரூ. 335.62 கோடி பாதி' ஒலான புதியதிட்டப் பணிகளுக்கும், சென்மைப் பெருநகர் குடிநீர் மழங்கள் மற்றும் கழிவு)காமியத்தின் சயப்பில் ரூ. 932 கோடி பாடுப்பீ Am 2 தி திட்டப் பணிகளுக்கும் அடிக்கல் நாட்டினார். நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாட ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் பா. மதிவேந்தன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பாலாஜி, துணை மேயர் மு. மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா முருகானந்தர். இ.ஆசடநகமாசி திருாகள் மற்றும் குடிநீர் வழங்கள் துறை முதன்களாச் சொலாளர் முனைலர் தாகார்த்திகேயன், இ.ஆ.. பெருநாள் சென்கனை பாநானாட்சி ஆணையர் திரு ஜெருரகுருபரன் சென்னை குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய்,நகராட்சி நிர்வாகத் துறை இயக்குநர் பி. மதுசூதன் ரெட்டி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன்,பேரூராட்சிகளின் இயக்குநர் எம். பிரதீப் குமார்,மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வாணியம்பாடி அரசு மருத்துவமனை தலைமை மருத்துவ அலுவலர் சிவ சுப்பிரமணியம் தூக்கிட்டு தற்கொலை!

வாணியம்பாடி, பிப்.7

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம் பாடி பைபாஸ் சாலையில் வசித்து வருப வர் மருத்துவர் சிவசுப்பிரமணியம் (50).

இவர் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேல் அரசு மருத்துவமனையில் குழந்தைகள் நல மருத்துவராக பணி யாற்றி வந்துள்ளார். மேலும் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக பதவி உயர்வு பெற்று அரசு மருத்துவமனை தலைமை மருத்துவராக பணியாற்றி வந்துள்ளார். மேலும் மாலை நேரத்தில் வீட்டில் தனியாக கிளினிக்கும் நடத்தி வந்துள் ளார்.



இந்நிலையில் நேற்று நாட் றம்பள்ளி அரசு மருத்துவம னைக்கு பணி மாற்றம் செய்து மாவட்ட சுகாதார துறை இணை இயக்குனர் ஞான மீனாட்சி உத்தரவிட்டுள்ளார். அதன் அடிப்படையில் இன்று அவர் நாட்றம் பள்ளி அரசு மருத்துவமனைக்கு சென்று மருத்துவம் பார்த்து விட்டு வீட்டிற்கு வந்து செல்போன் வீட்டில் வைத்து விட்டு வெளியில் சென்றவர் வெகுநேரமாகியும் வீட்டிற்கு வரவில்லை. இதனால் சந்தே கம் அடைந்த அவரது மனைவி அக்கம்பக் கம் பார்த்த பின்னர் வீட்டின் பக்கத்தில் புதியதாக கட்டி வரும் வீட்டிற்கு சென்று பார்த்துள்ளார். அங்கே அவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டு இருந்தது பார்த்து கூச்சல் இட்டுள்ளார். இதனை கேட்ட அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் உடனடியாக அவரை மீட்டு தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றனர். அங்கே பரிசோ தித்த மருத்துவர்கள் இவர் ஏற்கனவே இறந்து விட்ட தாக கூறினர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற நகர போலீசார் பிரேதத்தை கைப்பற்றி பிரேத பரிசோத னைக்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். சம்ப வம் குறித்து நகர போலீசார் வழக்கு பதிவு செய்து விசா ரணை மேற்கொண்டு வரு கின்றனர்.

நிர்வாகத்தில் ஏற்பட்ட பிரச்சனை கார ணமாக மன உளைச்சலில் இருந்ததாக அவரது மனைவி போலீசார் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

இறந்த மருத்துவர் சிவ சுப்பிரமணியமுக்கு வித்யா என்ற மனை வியும், குகன் என்ற மகன், சுவேதா என்ற மகள் உள்ளனர். மகன் குகன் சென்னை யில் உள்ள தனியார் மருத்துவக்கல்லூரி யில் இரண்டாம் ஆண்டு எம்.பி.பி.எஸ் படித்து வருகிறார். மகள் தனியார் பள்ளி யில் 10 ஆம் வகுப்பு படித்து வருகிறார்.



# காவேரிப்பட்டணத்தில் மாற்று கட்சியினர் அ.தி.மு.க.வில் இணைந்தனர்!

காவேரிப்பட்டணம், பிப்.7

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணத்தில் ஊத் தங்கரை சட்டமன்ற தொகுதி மத்தூர் தெற்கு ஒன்றியம் ஒன்றிய செயலாளர் நரேஷ் குமார் ஏற்பாட்டில் திமுக. காங்கிரஸ் உள்ளிட்ட மாற்றுக் கட்சிகளை சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர் அதிமுக துணை பொதுச்செய லாளரும். வேப்பனப்பள்ளி சட்டமன்ற உறுப்பினரு மான கே.பி. முனுசாமி முன்னிலையில் தங்களை அதி முகவில் இணைத்துக் கொண்டனர். நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான அசோக்குமார் , ஊத்தங்கரை சட்ட மன்ற உறுப்பினர் தமிழ் செல்வம், மாவட்ட பொருளா ளர் சுந்தரவடிவேலு. எம்ஜிஆர் இளைஞர் அணி ஒன்றிய செயலாளர் ராஜேஷ், குமார், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் நடராஜன், இளம்பெண்கள் பாசறை ஒன்றிய செயலாளர் சிலம்பரசன், மாவட்டத் துணைச் செயலா ளர் சாகுல் ஹமீது, ஒன்றிய செயலாளர் நகர செயலாளர் ஆறுமுகம், மாவட்ட மருத்துவர் அணி மருத்துவர் இளையராஜா, மாவட்ட அம்மா பேரவை செயலாளர் மாதையன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# புதுக்கோட்டை அருகே கோட்டைக்காடு கிராமத்தில் ஜல்லிக்கட்டு முகூர்த்தக்கால் நடும் விழா!



புதுக்கோட்டை,பிப்.7

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக் குடி அருகே உள்ள கோ ட்டைக்காடு புனிதசூசையப்பர்ஆலயதிருவிழாவினை முன்னிட்டு வருகின்ற 15.02 2026 ஞாயிற் றுக்கிழமை அ ன்று கோட்டைக்காடு வாடிவாசலில் மாபெரும் பரிசு ஜல் லிக் கட்டு விழா வெகு விமர்சையாக நடை பெற உள்ளது.

இதனை முன்னிட்டு வாடி வாசலில் முகூர்த்தக் கால் நடும்பனியில் கோட் டைக்காடு அருட்தந்தை பபி யான் தலை மையிலும்,கிராம பொதுமக்கள் முன் னிலை யிலும் நடைபெற்றது.

ஜல்லிக்கட்டு அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டு நடை பெற உள்ளது.காளையர் களுக்கு சீருடை வழங்கப்பட உள்ளது. காளையர்களுக்கும்,காளைகளுக்கும் முன்ப திவு நடைபெற உள்ளது.

இதையடுத்து முகூர்த்த கால்நடும் பணிக்கு கிராம பொதுமக்கள் இளைஞர் கள் விழா காரிய, கமிட்டி இளைஞர் ஊர் பொதுமக்கள் மற்றும் அப்பகுதியை சேர்ந்த ஜல்லி க்கட்டு காளைகளை வளர்ப்போர் ஆகியோருடன் முகூ ர்த்தக் கால் நடும் பணியில் கலந்து கொண்டனர்.



# புதுக்கோட்டையில் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற கழக கட்டமைப்பை ஏற்படுவதற்கான கலந்தாய்வு கூட் டம்!

புதுக்கோட்டை.பிப்.7

புதுக்கோட்டை உயர்தொடக்க பள்ளி யில் மாவட்டச்செயலாளர் நாயகம் தலை மையில் நடைபெற்றது. மாவட்ட பொரு ளாளர் செந்தில்குமார், துணைத் தலைவர் சரவ ண பெருமாள், அறந்தாங்கி கல்லில் மாவட்ட தலைவர் கோவிந்தராஜன், செய லாளர் தனபால், மாவட்டத்து ணைத் தலைவர்கள் சரவண பெருமாள், தெய்வீ கன் , மாநில செயற்குழு உறுப்பினர் முகேஷ் ஆகியோர் முன்னிலை வகித்த னர். ஒருங்கிணைப்பாளர் மணிகண்டன் கலந்து கொண்டு அரசின் திட்டங்களை வரவேற்றி பேசினார், ஒவ்வொரு ஆசிரி யரும் நன்றி அறிவிப்பு மாநாட்டில் பங் கேற்க வேண்டும் என பேசினார்.

கூட்டத்தில் வருகிற 8ம் தேதி தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஜாக்டோ ஜியோ அமைப்பின் மூலம் நடத் தப்படும் உறுதிபடுத்தப்பட்ட ஓய் வூதியத்திட்ட அறிவிப்பு க்கான நன்றி அறிவிப்பு மாநாட்டில் புதுக்கோட்டை மாவ ட்டத்தைச் சேர்ந்த தமிழ்நாடு ஆசி ரியர் முன்னேற்ற கழகத்தின் அனைத்து ஆசிரிய பெருமக்களும் பங்கேற்பதெ ன முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் ஒருங்கிணைப்புக்குழு வைச்சேர்ந்த தொழில்நுட்பப் பிரிவு செய லாளர் கஸ்தூரி ரங்கன், முன்னாள் மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெகதீஸ்வரன்,


கல்வி மாவட்ட அமைப்புச்செயலாளர் தியானேஸ்வர ன், கல்வி மாவட்டப் பொருளாளர் ஜோதிபாசு, கந்தர்வ கோட்டை ஒன்றியத்தலைவர் ராஜேந்தி ரன், திருமயம் வட்டாரப் பொறுப்பாளர் ஷாம் சுந்தர், அரிமளம் வட்டார தலைவர் வசந்தகுமார், விராலிமலை வட்டாரத் தலைவர் பாண்டியன்,அன்னவாசல் ஒன் றிய தலைவர் பால்ராஜ், கதிஜா பேகம், குண்டாண்டார் கோவில் பொறுப்பாளர் கள் செல்வகுமார்,புதுக்கோட்டை வட் டார நிர்வாகிகள் யோகராஜ், சுப்பிரமணியன், சண்முகம், கந்தர்வ கோட் டை வட்டார பொறுப்பாளர் கள்,கணேசன், பாரதிராஜா,

மாரியய்யா குன்றாண்டார்கோவில் செல்வகுமார்,பா ஸ்கரன், உள்ளிட்டதிர ளான ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

# OPPO Reno15c அறிமுகம்: சக்திவாய்ந்த பேட்டரி, AI கேமரா, பிரீமியம் டிசைன் – அனைவருக்கும் முழுமையான ரேனோ அனுபவம்!

கோயம்புத்தூர், பிப்.7

OPPO இந்தியா தனது Reno15 Series வரிசையை விரிவுபடுத்தும் வகையில் புதிய Reno15c ஸ்மார்ட்போனை அறிமுகப்படுத்தியுள் ளது. பயணம், புகைப்ப டம், வீடியோ உருவாக் கம் போன்றவற்றில் ஆர் வம் கொண்ட பயனர் களுக்கு முழுமையான 'Reno Experience' வழங் கும் நோக்கில் இந்த மாடல் வடிவமைக்கப் பட்டுள்ளது. 7000 mAh பேட்டரி, 80W SUPER VOOC™ ஃபாஸ்ட் சார் ஜிங், 6.57" AMOLED டிஸ்ப்ளே, Snapdragon® 6 Gen 1 பிராசஸர், மற்றும் ColorOS 16 ஆகிய அம்சங் களுடன், மெலிதானமற் றும் பிரீமியம் டிசைன் இந்த போன் வருகிறது. Afterglow Pink மற்றும் Twi light Blue நிறங்களில் பிப் ரவரி 5 முதல் இது விற்ப னைக்கு கிடைக்கும். புகைப்படம் மற்றும் வீடியோ உரு வாக்கத்தை மையமாகக் கொண்டு, Reno15c மாடலில் 50MP மெயின் கேமரா, 8MP அல்ட்ராவைட், 2MP மேக்ரோ மற் றும் 50MP அல்ட்ராவைட் செல்ஃபி கேமரா வழங்கப்பட் டுள்ளது. 4K HDR 60fps வீடியோ பதிவு, UltraSteady Video, DualView Video, மற்றும் AI Editor 3.0 போன்ற வசதிகள் கிரி யேட்டர்களுக்கு ஸ்டுடியோ தரமான அனுபவத்தை தருகி றது. AllRound Armour Body, IP66/68/69 பாதுகாப்பு, AI Hyper Boost, AI Link Boost மற்றும் Google Gemini இணைந்த AI அம்சங்கள் ஆகியவை இதன் பயன்பாட்டை மேலும் பலப் படுத்துகின்றன. OPPO இந்தியா சார்பில் பேசிய Damon Yang, President, OPPO India கூறுகையில், "Reno Series எப்போதும் டிசைன், கேமரா மற்றும் பயனர் அனுபவத்தை புதிய அள வுகோல்களை அமைத்துள்ளது. Reno15c மூலம் அந்த அனு பவத்தை மேலும் பலருக்கும் கொண்டு செல்கிறோம். நீண்ட நேர பேட்டரி, சக்தி வாய்ந்த AI கருவிகள் மற்றும் கிரியேட்டர்களுக்கேற்ப கேமராதிறன்கள் ஆகியவை, இன் றைய தலைமுறையின் வேகமான வாழ்க்கை முறைக்கு சிறந்ததுணையாகஇருக்கும்,"என்றார். Reno15c 8GB+256GB மாடல் ரூ.34,999 மற்றும் 12GB+256GB மாடல் ரூ.37,999 விலையில் Amazon, Flipkart, OPPO estore மற்றும் ரீட்டெயில் கடைகள் சலுகைகளுடன் கிடைக்கிறது.



விடுமுறைக்கு வந்த இடத்தில் சோகம்:

# போச்சம்பள்ளி அருகே காட்டுக்கொள்ளை கிராமத்தில் பேருந்து மோதி ராணுவ வீரரின் மனைவி பலி!

கிருஷ்ணகிரி,பிப்.7

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம் பள்ளி அடுத்த நாகரசம்பட்டி அடுத்த காட் டுக்கொள்ளை கிராமத்தை சேர்ந்தவர் தமிழ்செல்வம். இவரது மகன் சத்தியகு மார் (30). இந்திய ராணுவத் தில் பணியாற்றி வரும் இவர், கடந்த 15 நாட்களுக்கு முன் புதான் விடுமுறையில் தனது சொந்த ஊரான காட்டுக் கொள்ளை கிராமத்திற்கு வந் துள்ளார்.நேற்று மாலை, சத் தியகுமார் தனது மனைவி திவ்யா (29) மற்றும் மகன்கள் யாழ்வேந்தன் (5), தர்சன் (3) ஆகியோருடன் வேலம் பட்டி கிராமத்தில் வாரம் ஒரு முறை செயல் படும் வாரச சந்தைக்குச் சென்று காய்கறி கள் வாங்கிக்கொண்டு புல் லட் வாகனம் வீடு திரும்பிக் கொண்டிருந் தார்.



சென்றாயம்பட்டி கிராம பேருந்து நிறுத் தம் அருகே அவர்கள் சென்றுகொண்டிருந் தபோது பின்னால் வந்த ஒரு தனியார் கல் லூரி பேருந்து எதிர்பாராதவிதமாக இவர்கள் சென்ற டூவீலர் மீது பேருந்து ""டச்" செய்ததில் புல்லட் வாகன நிலைத டுமாறி கீழே விழுந்த நான்கு பேரும் படு காயமடைந்தனர்.விபத்தில் படுகாயம டைந்த திவ்யா, உடனடியாக மீட்கப்பட்டு கிருஷ்ணகிரி அரசு மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப் பட்டார்.அங்குதீவிரசிகிச்சை அளிக்கப்பட்டும் பலனின்றி அவர் பரிதாபமாக உயிரிழந் தார்.இந்த விபத்து குறித்து தக வல் அறிந்த நாகரசம்பட்டி போலீசார், திவ்யாவின் உடலை மீட்டு பிரேத பரிசோ தனைக்கு அனுப்பி வைத்த னர். மேலும், விபத்து தொடர் பாக வழக்குப்பதிவு செய்து தனியார் பேருந்து ஓட்டுநரி டம் தீவிர விசாரணை மேற் கொண்டு வருகின்றனர்.

காவல் காக்க வேண்டிய ராணுவ வீரர், மகிழ்ச்சியாக கு டும்பத்துடன் விடுமு றையை கழிக்க வந்த விடுமுறை நாட்க ளில், மனைவியை பறிகொடுத்துவிட்டு நிற்பது அப்பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.

# கொடைக்கானல் பிரையன்ட் பூங்காவில் மலர்ந்த "பேர்ட் ஆப் பாரடைஸ் பூக்கள்!

கொடைக்கானல், பிப்.7

கொடைக்கானல் தோட்டக்கலைத்து றையின் கட்டுப்பாட்டில் உள்ளபிரையன்ட்பூங்காவில் "பேர்ட் ஆப் பாரடைஸ் (Bird of paradise) என்றழைக்கப்ப டும் வண்ணமிகு பூக்கள் தற்போது பூக்க துவங்கியுள்ளன.



ஸ்ட்ரெலிட்சியா ரெஜினே என்ற தாவர பெயரை கொண்ட செடிகளில் ஆரஞ்சு மற்றும் நீல நிறத்தில் கொக்கு பறப்பது போன்று இருக்கும்.

இப்பூக்கள் கொக்கு போன்ற பறவையின் வண் ணமயமான தலை மற்றும் அலகை ஒத்துள்ளதால் பார்ப்போரை பரவசப்படுத் துகின்றது.

இப்பூக்களின் அருகில் நின்று டூரிஸ்ட்கள் செல்பி எடுத்து மகிழ் கின்றனர்.

# பாலக்கோடு அருகே கிணற்றில் பிணமாக மிதந்த பெண்!

பாலக்கோடு, பிப்.7

தர்மபுரிமாவட்டம்,பாலக்கோடுஅடுத்தபஞ்சப்பள்ளி நீலாஞ்சா னூர் பகுதியைச் சேர்ந்த வர் வசந்தா(61). கடந்த சில நாட்களுக்கு முன்பு வீட்டில் இருந்து வெளியே சென்றவர், மீண்டும் வீடு திரும்ப வில்லை. இதனால் குடும்பத்தினர் அவரை பல்வேறு இடங்களில் தேடி வந்தனர். இந்நிலையில், அந்த பகுதியில் உள்ள விவசாய கிணற்றில் வசந்தா சடலமாக மிதப்பதாக, நேற்று முன்தினம் அவ்வழி யாக சென்ற வர்கள் தெரிவித்தனர்.அதன் பேரில், சம்பவ இடத்துக்கு சென்ற பாலக்கோடு தீயணைப்புதுறையினர் மற்றும் போலீசார், கிணற்றி ல் மிதந்த வசந்தாவின் சடலத்தை மீட்டு விசாரணை நடத் தினர். பின்னர், அவரது உடல் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோத னைக்காக அனுப்பி வைக்கப்ப ட்டது.

இதுபற்றி பஞ்சப்பள்ளி போலீசார் வழக்கு பதிவு செய்து, விசாரணை நடத்தி வருகின்றனர்.

# டெக்ஸியன் இந்தியா, 850+ இருக்கைகள் கொண்ட புதிய சென்னை அலுவலகத்தை திறந்து வைத்து, உலகளாவிய விநியோகம் மற்றும் புதுமை திறன்களை வலுப்படுத்தியது!

சென்னை,பிப்.7

டெக்ஸியன் இந்தியா சார்பில் பேசிய குமார் ராஜகோபாலன் , "சென்னையில் திறக்கப்பட்ட இந்த புதிய 850+ இருக்கைகள் கொண்ட அலுவல கம், எங்கள் பொறுப்புள்ள வளர்ச்சி, உள்ளூர் திறமைகளை வளர்த்தல் மற்றும் நீண்ட கால திறன் மேம்பாட்டிற்கான உறு தியை வெளிப்படுத்துகிறது" என்று கூறினார்.



அவர் மேலும், "சிறிய ஆதரவு மையமாகத் தொடங்கிய டெக் ஸியன் இந்தியா, இன்று ஆறு நக ரங்களில் ஏழு அலுவலகங்களு டன், 2,000க்கும் மேற்பட்ட பணியாளர்கள் கொண்ட நிறுவனமாக வளர்ந்து, அமெரிக்கா மற்றும் பிற சர்வதேச சந்தைகளுக்கான உலகளாவிய விநியோகம், செயல்பாடுகள் மற்றும் புதுமை மையம் செயல்பட்டு வருகிறது" என்றும் குறிப்பிட்டார்.

"இந்த மையத்தின் மூலம், இந்திய இளைஞர்களின் தொழில்நுட்ப திறனை உலகளாவிய அளவில் வெளிப்படுத்தும் வாய்ப்புகளை உருவாக்குகிறோம்" என வும் அவர் தெரிவித்தார்.

மேலும், டெக்ஸியன் இந்தியா உருவாக்கிய AgriIQ என்ற செயற்கை நுண்ணறிவு அடிப்ப டையிலான வேளாண் நுண்ண றிவு தளம் குறித்து அவர் பேசி னார். "AgriIQ மூலம், அரசு, நிறுவனங்கள் மற்றும் விவசாயி களுக்கு உள்ளூர் சூழலை அடிப் படையாகக் கொண்ட நேரடி தக வல் மற்றும் உள்நோக்கங்களை வழங்கி, உற்பத்தித் திறன் மற் றும் நிலைத்தன்மையை உயர்த்த உதவுகிறோம். 'In the Business for Good' என்ற எங்களின் நோக்கத்துக்கு ஏற்ப, இந்தி யாவிலிருந்து உலகத்திற்கான நல்ல மாற் றங்களை உருவாக்கும் முயற்சிகளை இந்த புதிய சென்னை அலுவலகம் மேலும் வேகப்படுத்தும்" என்று அவர் தெரிவித் தார்.



தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், தொப்பையாறு நீர்த்தேக்கத்திலிருந்து விவசாயநிலம்பாசனத்திற்காகதருமபுரிமாவட்டஆட்சியர்ரெ.சதீஸ் தருமபுரிநாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி முன்னிலையில் தண்ணீர் திறந்து வைத்து மலர்த்துவினார்கள். உடன் தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன், பொதுப்பணித்துறை (நீர் வள ஆதாரம்) செயற்பொறியாளர் செந்தில்குமார், உதவி செயற்பொறியாளர் கீருபா, உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.



வேளச்சேரி சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு172க்குட்பட்ட சர்தார் பட்டேல் சாலை பிரதான சாலை சந்திப்பிலிருந்து குருநானக் கல்லூரி சந்திப்பு 200 அடி சாலை வரை, ரூ.310 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய மேம்பாலம் மாதிரி வடிவம்

# பழவூர் கோயிலுக்கு ரூ.50 லட்சத்தில் திருத்தேர் பெற்று தந்த சபாநாயகருக்கு அறங்காவலர் குழுவினர் நேரில் நன்றி தெரிவிப்பு!



நெல்லை,பிப்.7

நெல்லை மாவட்டம் பிரசித்தி பெற்ற பழவூர் அருள்மிகு நாறும்பூநாத சுவாமி திருக்கோயிலுக்கு புதிதாக திருத்தேர் உருவாக்கி தர வேண்டும் என பழவூர் பக்தர்கள் பொதுமக்கள் சார்பில் தமிழக சட்டப்பேரவை தலைவரும் ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் அப்பாவுவிடம் சட்டசபை தேர்தலுக்கு முன்பாக கோரிக்கை வழங்கப்பட்டது. இதை ஏற்று தமிழ்நாடு சபாநாயகராக

மு. அப்பாவு பதவி ஏற்றவுடன் தமிழ்நாடு முதல்வரிடம் நேரில் வலியுறுத்தி அரசு கொள்கை முடிவு எடுத்து செயல்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டபடி, தமிழகத்தில் 68 திருக்கோவிலுக்கு புதிதாக திருத்தேர் உருவாக்குவதற்கு அனுமதி பெற்று தந்ததோடு சட்டப்பேரவையில் இந்து சமய அறநிலையத் துறை மானிய கோரிக்கையின் போது புதிதாக திருத்தேர் 18 திருக்கோயிலுக்கு உருவாக்கப்படும் என்ற அறிவிப்பை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு வெளியிட்டார். அதில் முதல் திருக்கோயிலாக நெல்லை மாவட்டம் பழவூர் அருள்மிகு நாறும்பூநாத சுவாமி திருக்கோயிலுக்கு ரூபாய் 50 லட்சத்தில் புதிதாக திருத்தேர் உருவாக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிடுவதற்கு உறுதுணையாக இருந்து பெற்று தந்ததற்கும், இதன் தொடர்ச்சியாக புதிய திருத்தேர் உருவாக்குவதற்கு ஆணையரிடமிருந்து அங்கீகாரமும் அனுமதியும் பெற்றுத் தந்த சபாநாயகர் அப்பாவுவை அறங்காவலர் குழுவினர் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

மேலும் புதிய திருத்தேர் திருப்பணி தொடக்கவிழாவருகிற12.02.2026ஆம் தேதி வியாழன் கிழமை காலை 9.30 மணிக்குநடத்துவதற்கும், அதில்கலந்து கொண்டு திருத்தேர் திருப்பணியை தொடங்கி வைப்பதற்கும் இசைவு தெரிவித்த சபாநாயகருக்கு திருக்கோயில் நிர்வாகத்தின் சார்பில் அறங்காவலர் குழுத் தலைவர் பழவூர் இசக்கியப்பன் தலைமையில் அறங்காவலர் குழுவினர் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.



# வாணியம்பாடி கன்கார்டியா மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மற்றும் ஆண்டு விழா விழா!

வாணியம்பாடி, பிப்.7

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி கன்கார்டியா மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மற்றும் ஆண்டு விழா பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

விழாவுக்கு பள்ளி தலைமை ஆசிரியர் ஏ.கோபி தலைமை வகித்து தலைமை உரையாற்றினார். பள்ளி தாளாளர் ஜி.குமார், கோவிந்தபுரம் பெத்லெகேம் லுத்தரன் நூற்றாண்டு திருச்சபை ரெவெரென்ட் முனைவர் எஸ்.சுரேஷ்பால் எபிநேசர் ஆகியோர்

முன்னிலை வகித்தனர். தமிழாசிரியர் ஆர்.சுரேஷ் குமார் அனைவரையும் வரவேறார். உடற்கல்வி ஆசிரியை எம்.சசிகலா ஆண்டறிக்கை வாசித்தார்.

விழாவில் ஐ.இ.எல்.சி துணை பெருந்தலைவர் ரெவரெண்ட் சி.குமணன் கலந்து கொண்டு தேசிய கொடி ஏற்றி வைத்து அணிவகுப்பு மரியாதை ஏற்றுக் கொண்டார் முன்னாள் தலைமை ஆசிரியர்எஸ்.கிருபானந்தராஜ்கலந்துகொண்டு ஒலிம்பிக் கொடி ஏற்றி வைத்தும் ஒலிம்பிக் சுடர் ஏற்றி வைத்தார்.

இதில் ஸ்டேட் பாங்க் வாணியம்பாடி கிளை மேலாளர் என்.சுரேஷ் பாபு, ஐ.ஓ.பி வாங்கி கிளை மேலாளர் எம். வினோத் ஆகியோர் கலந்து கொண்டு விழாவை துவக்கி வைத்தனர்.

விழாவில் கனரா வங்கி மேலாளர் எஸ். நவீன் குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

பள்ளி ஆண்டு விழாவை முன்னிட்டு மாணவர்களின் கலை நிகழ்சிகள் நடைபெற்றது. இதில் வெற்றிபெற்ற மாணவர்கள், முன்னாள் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பி.வை.எம்.சுதாகுமார் பரிசுகளை வழங்கி வாழ்த்தி பேசினார்.

நிகழ்ச்சியை ஆசிரியர்கள் எஸ்.ஆபகூக் அருணோதயராஜ், ஜான் ஹென்றி தேவரசன் ஆகியோர் தொகுப்பு வழங்கினர். அணிவகுப்பு ஏற்பாடுகளை ஆசிரியர்கள் பி.ஜெயபாலன், இளையபாரதி ஆகியோர் செய்து இருந்தனர்.

விழாவில் ஆசிரியர்கள், மாணவர்கள்,பெற்றோர்கள் மற்றும் பகுதிமக்கள் கலந்து கொண்டனர்.

முடிவில் ஆங்கில ஆசிரியர் சி.கருணாகரன் நன்றி கூறினார்.

# நகராட்சி முஸ்லீம் பெண்கள் நடுநிலைப் பள்ளி கூடுதல் வகுப்பறைகள் கட்டிடம்

## காணொளி வாயிலாக தமிழ்நாடு முதல் அமைச்சர் திறந்து வைத்தார்!!



வாணியம்பாடி, பிப்.7

தமிழ்நாடு முழுவதும் பல்வேறு துறைகள் சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் திறப்பு விழா நேற்று சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு காணொளி வாயிலாக திறந்து வைத்தார்.

இதனை தொடர்ந்து திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி கோட்டை பகுதியில் உள்ள நகராட்சி முஸ்லீம் பெண்கள் நடுநிலைப்பள்ளியில் ரூபாய் 83 லட்சம் மதிப்பீட்டில் 6 வகுப்பறைகள் கொண்ட கட்டிடத்தை

நகராட்சி ஆணையாளர் ரகுராமன் மற்றும் நகரமன்ற துணைத்தலைவர் கயாஸ் அஹமத் ஆகியோர் ரிப்பன் வெட்டி திறந்து வைத்து குத்து விளக்கு ஏற்றினர்.

நிகழ்ச்சிக்கு பள்ளி தலைமை ஆசிரியை ஜெய்புன்னிசா தலைமை வகித்தார். நகராட்சி சுகாதார அலுவலர் அப்துல் ரஹீம், நகரமன்ற உறுப்பினர் சி.முஹம்மத் நவுமான் ஆகியோர் முன்னிலை வகித்தனர். உதவி தலைமை ஆசிரியை ஷகிலா அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் நகரமன்ற உறுப்பினர்கள் எம்.பஷீர் அஹ்மத், பி.முஹம்மத் அனீஸ், நகராட்சி பணி ஆய்வாளர் அரி கிருஷ்ணன் மற்றும் பள்ளி ஆசிரியைகள், மாணவர்கள் கலந்துகொண்டனர். முடிவில் தலைமை ஆசிரியை ஜெய்புன்னிசா நன்றி கூறினார்.



திருப்பத்தூர் மாவட்ட கண்காணிப்பாளர் வி. சியாமளா தேவி உத்தரவின் பேரில், எஸ் ஜே.எச்.ஆர். பிரிவு மற்றும் திருப்பத்தூர் மாவட்ட போக்குவரத்துத் துறை இணைந்து ஆம்பூர் கே.எஸ்.ஆர்.மெட்ரிக் பப்ளிக் பள்ளியின் மாணவ, மாணவியர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தினர். இந்த நிகழ்ச்சியில் போக்குவரத்து விதிமுறைகள், போக்சோ சட்டம், குழந்தை திருமணம் தடுப்பு, இணையவழி குற்றங்கள், போதைப் பொருட்கள் பயன்பாட்டால் ஏற்படும் தீமைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. மேலும், அவசர உதவி எண்கள் 181, 1098 மற்றும் காவல் உதவி செயலி பயன்பாடு குறித்தும் மாணவ, மாணவியர்களுக்கு விளக்கப்பட்டது. இவ்விழிப்புணர்வுநிகழ்ச்சியில்வட்டாரப்போக்குவரத்து அலுவலர் பன்னீர்செல்வம், எஸ்.ஜே.எச்.ஆர். பிரிவு உதவி காவல் ஆய்வாளர்கள் வீரம்மாள், ரூபி, கவிதா, பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# தர்பூசணி பழங்களை தாராளமாக வாங்கி உண்ணலாம்- சேலம் கலெக்டர் அறிவுறுத்தல்!



சேலம்,பிப்.7

தர்பூசணி பழங்கள் விற்பனை தொடங்கிய நிலையில், அந்த பழங்களில் நிற மூட்டி மற்றும் சுவையூட்டி ஆகியவற்றை சேப்பதாக எழுந்த தகவல் பரவிய நிலையில், இது குறித்து சேலம் மாவட்ட ஆட்சியர் டாக்டர். பிருந்தா தேவி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், சமீப காலமாக சில ஊடகங்களிலும், தொலைக்காட்சிகளிலும், தர்பூசணி பழங்களில், ரசாயனத்தைக் கொண்டு பழங்களை பழுக்க வைப்பதாக தவறான தகவல் பரப்பப்பட்டு வருகிறது என்றும், இதனைப் பொதுமக்கள் நம்ப வேண்டாம். தர்பூசணி பழங்களை மக்கள் தாராளமாக வாங்கி உண்ணலாம் என்று, சேலம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பிருந்தா தேவி தெரிவித்துள்ளார்.

# ஸ்கோடா கைலாக் 50,000 கார்கள் விற்பனை செய்து மைல்கல்லை கொண்டாடி ஓராண்டு சாதனை பதிவு செய்தது!



சேலம், பிப்.7

2025ஆம் ஆண்டில் தனது மிகச்சிறந்த விற்பனை வளர்ச்சியைப் பதிவு செய்தும், புதிய குஷாக் காரை அறிமுகப்படுத்தியும் வெற்றிநடை போடும் ஸ்கோடா ஆட்டோ இந்தியா, தற்போது தனது தயாரிப்புகளின் எண்ணிக்கையைத் தொடர்ந்து விரிவுபடுத்தி வருகிறது. இந்தியச் சாலைகளில் ஐரோப்பியத் தொழில்நுட்பத்தை அனைவரும் பெறும் வகையில் கொண்டு சேர்ப்பதே இந்த பிராண்டின் உத்தியாகும். அதன் ஒரு பகுதியாக, தனது அதிகம் விற்பனையாகும் காரான கைலாக் மாடலில் கூடுதல் வேரியண்ட்களை இணைத்து, வாடிக்கையாளர்களுக்கு அதிக தேர்வுகள் மற்றும் சிறந்த மதிப்பினை வழங்குகிறது இது சப்4எம் எஸ்யூவி பிரிவில் கைலாக் ஐ ஒரு முக்கியமான போட்டியாளராக நிலைநிறுத்தியுள்ளது. கைலாக் இன் முதலாம் ஆண்டு நிறைவைக் குறித்து, ஸ்கோடா ஆட்டோ இந்தியா நிறுவனத்தின் பிராண்ட் இயக்குனர் ஆஷிஷ் குப்தா கூறுகையில்,

“இந்தியாவிற்கான எங்களது நீண்டகால அர்ப்பணிப்புக்கு கைலாக் ஒரு சிறந்த சான்றாகும்; சந்தையின் மிகவும் சவாலான ஒரு பிரிவில் நாங்கள் கால்பதிக்க இது வழிவகுத்தது, 50,000 விற்பனை மைல்கல்லைக் கடந்தது உண்மையிலேயே நெகிழ்ச்சியளிக்கிறது மற்றும் ஸ்கோடா பிராண்ட் மீதான வளர்ந்து வரும் நம்பிக்கையைப் பிரதிபலிக்கிறது. இந்த வேகத்தைத் தொடரும் வகையில், வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கு ஏற்ப மேம்படுத்தப்பட்ட கூடுதல் மாடல்களுடன் கைலாக் வரிசையை நாங்கள் விரிவுபடுத்துகிறோம் என்றார்.



தமிழ்நாடு முதலமைச்சர் தருமபுரி மாவட்டத்தில், தருமபுரி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தினை காணொலிக் காட்சி வாயிலாக, திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் தருமபுரி மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ் கலந்து கொண்டு, பார்வையிட்டு, இரண்டு வழித்தட பேருந்துகளை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். உடன் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.கே.மணி, தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.எஸ்.மகேஸ்வரன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கவிதா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ரூபன் சங்கர் ராஜ், தருமபுரி நகர மன்ற தலைவர் லட்சுமி நாட்டான் மாது, நகர மன்ற துணைத்தலைவர் நித்யா அன்பழகன், பென்னாகரம் பேரூராட்சித் தலைவர் கி. வீரமணி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் (சேலம்) ப.அசோக்குமார், தருமபுரி வட்டாரப் போக்குவரத்து அலுவலர் சி.க.ஜெயதேவ்ராஜ், தருமபுரி நகராட்சி ஆணையர் இரா.சேகர், உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் 9ஆவது பொருநை நெல்லை புத்தகத் திருவிழாக்கான இலச்சினையினை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.சுகுமார், நெல்லையின் மூத்த எழுத்தாளர் சாகித்ய அகாடமி விருதாளர் வண்ணதாசன், மொழிபெயர்ப்பிற்கான சாகித்ய அகாடமி வென்ற விமலா, சிறார் எழுத்தாளர் சூடாமணி ஆகியோர் முன்னிலையில் வெளியிட்டார். நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் துரை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சரவணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அனிதா உட்பட பலர் உள்ளார்கள்.

# ஆம்பூர் அடுத்த மாதனூர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூபாய் 4.95 கோடி மதிப்பீட்டில் காவேரி கூட்டு குடிநீர் திட்டம்!

## மாவட்டஆட்சியர்.சிவ சௌந்திரவல்லி, அ. செ. வில்வநாதன் எம்எல்ஏ தொடங்கி வைத்தனர்!!



ஆம்பூர்,பிப்.7

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாதனூர் ஊராட்சி ஒன்றியத்தில், பாப்பனப்பள்ளி ஊராட்சியில் உள்ள வடச்சேரி மற்றும் 17 இதர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தினை மாவட்ட ஆட்சியர்.க.சிவ சௌந்திரவல்லி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர்.அ.செ.

வில்வநாதன் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொளிக் காட்சி வாயிலாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில், திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாதனூர் ஊராட்சி ஒன்றியத்தில், வடச்சேரி மற்றும் 17 இதர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் க.சிவ சௌந்திரவல்லி, ஆம்பூர் சட்டமன்றஉறுப்பினர் அ.செ.வில்வநாதன் ஆகியோர் வடச்சேரி மற்றும் 17 இதர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தனர்.

மாவட்ட ஆட்சியர் தெரிவிக்கையில

திருப்பத்தூர் மாவட்டத்திற்குட்பட்ட ஆம்பூர் சட்டமன்ற தொகுதியின் சின்ன பள்ளிக்குப்பம், பாப்பனப்பள்ளி, வடகரை, வடச்சேரி மற்றும் மேல்சானாகுப்பம் ஆகிய 5 ஊராட்சிகளை உள்ளடக்கிய கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தும் விழாவானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொளிக் காட்சி வாயிலாக தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 4.95 கோடி ஆகும்.

2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின் படி இந்த கூட்டு குடிநீர் திட்டத்தின் மொத்த மக்கள்தொகை 7068 ஆகும்.

அடிப்படை ஆண்டான 2024க்கான மக்கள்தொகை 8071 ஆகும்.

இடைநிலை ஆண்டான 2039 மற்றும் உச்சகட்ட ஆண்டான 2054க்கான மக்கள் தொகை முறையே 9224 மற்றும் 10384 ஆகும்.

நிகழ்ச்சியில் மாதனூர் ஊராட்சி ஒன்றியகுழுதலைவர் அகரம்சேரி ப.ச.சுரேஷ் குமார் ஆலங்காயம் மேற்கு ஒன்றிய செயலாளர் வி. எஸ்.ஞானவேலன் மற்றும் மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நித்தியாநந்தம், நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பர்குணன், மாவட்ட ஊராட்சி குழு உதவி நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் குமரவேல், உட்பட அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.




சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு111க்குட்பட்ட காதர் நவாஸ்கான்சாலையில்ரூ.19.81கோடிமதிப்பீட்டில்அமைக்கப்பட்டுமக்கள்பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்ட நடைபாதை வளாகம்